ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. ஸ்ரீமுகவருஷ புரட்டாசிமீ பகுதி ௨.
Vol. 10. September & October 33. No. 2.

பெருமாள் வருணனுக்கு அருள்புரிந்தது

—o—

காஃபிடித்தான் முன்னர்க் கடலரையன் தோன்றிலனால்
கோல்விடுத்தான் ஆங்கே குறுகினான்—மேலெடுத்த
சீற்றமிலன் காணமுளன செங்கண்மால் வெங்கணைக்கு
மாற்றலர்யார் சொல்லென்றான் மற்று.

ஸீதாபிராட்டியைச் சிறைமீட்டற்கு இலங்கைசெல்லக்கருதின பெருமாள் வானரப்படையுடன் கடற்கரையடைந்தார். அங்கே தம்மிடம் அடைக்கலம்புகுந்த விபீஷணாழ்வானால் இலங்கையின் திறம் எல்லாவற்றையும் கேட்டு அறிந்துகொண்டார் அதன் பின்னர் அவர், ஸமுத்ரத்தைக்கழிந்து அக்கரை சேர்தற்கு உபாயம் யாதென ஆராய்ந்தார்.

அப்பொழுது விபீஷணாழ்வான் " 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' என்று காத்துவைத்த நும்திருவுருவத்தை இக் கடலரையன் அறியாதவனல்லன்; அன்றியும் நும் குலமுதற்றலைவரான ஸகரராலே இவ்வலைகடல் அகன்று பரவலுற்றது; அந்த நன்றியையும் அவன் மறவான்; வேண்டினவர்க்கு வேண்டினபலன்களைக்கொடுக்கும் இம் மாக்கடல் நும் படைசெல்லுதற்கும் வழியளிக்குமென்பதிற் சந்தேகமில்லை; ஆதலால் தேவரீர் வருணனை இரந்து வழிவேண்டுவீராக" என்று கூறினன். பெருமாளும் அதனை நன்றென்றுகொண்டு உடன்படலாயினர்.

"தருணமங்கையைமீட்பதோர்நெறிதருகென்னும்
பொருள்நயந்துநன்னூனெறியடுக்கியபுல்லில்
கருணையங்கடல்கிடந்தனனகருங்கடல்நோக்கி
வருணமந்திரமெண்ணினனவிதிமுறைவணங்கி."

ஸமுத்ரராஜனிடம் சரணாகதிசெய்தற் றொருப்பட்ட பெருமாள் சாஸ்த்ரோக்தமாக தர்ப்பைப்புல்லைப் பரப்பினர், வான்முறையாக வணங்கி வருண மந்த்ரத்தை வாயினாற்சொல்லி எண்ணினர். கருங்கடலை நோக்கிக் கருணைக்கடல் கிடந்தது என்னுமாறு அவர் அங்கே பள்ளிகொண்டெழுந்தருளியிருந்து வருணனை வழிபட்டார்.

அப்பொழுது ஒருநாளினளவு ஓர் ஊழியினளவாய் நீண்டது. அத்தகைய நாட்கள் ஏழு சென்றபின்னரும் வருணன் வந்து தோன்றினானில்லை. அதனால், நீரில் நெருப்பு மூண்டதென்னப் பெருமாள் திருவுளத்திற் சீற்றம் பிறந்தது. தாமரைக்கண்கள் செந்நிறம் மிக்கன. நாணேற்றின விற்போற் புருவங்கள் வளைந்தன. அவர் கனலெழ உயிர்த்துப் புகையுக நகைத்தார்.

"இந்த ஜடப்ராக்ருதியான கடல் தன் ஜலஸம்ருத்தியால் கர்வங் கொண்டது. வழி உண்டு, இல்லை என்று ஒரு வார்த்தையும் ஈந்திலது. ஆயினும் ஒளித்துநிற்பது இல்லையென்று மறுப்பதேயாகும். ஒன்றொரு குறையுமின்றி எல்லாப்பெருமையும் உடையரானாலும், ஒருவர் ஒரு பொருளைப் பிறரிடம் சென்று யாசித்தால் அவர் தம் சிறுமையினின்றுதிர்வதேயில்லை. மனைவியையிழந்த நான் இப்பொழுது மதிப்பையும் இழந்தேன். வில்லாண்மையின்றியே இராவணன் என் இல்லாளைக் கவர்ந்தான். அதற்கு யான் ஒன்றும் செய்ய இயலாமை யால் என்னை ஒரு வீரம் நீங்கிய மனிசனென்று இவ்வேலை இகழ்ந் திட்டது. என்பொருட்டு அகத்தில் ஈரமில்லாதசெயல்புரிந்த இதனைப் புறத்திலும் ஈரமில்லதாகவே யான் புலர்த்திவிடுவேன். மேல்வரும் ஏதத்திற்கு அஞ்சி நான் இதனிடம் இரத்தலை மேற்கொண்டேனன்றி வேறில்லை. ஆயினும் அதுவே என்னை எளியனென்று எள்ளு தற்குக் காரணமாயமைந்தது. திரைக்கடல் ஏழையும் அரைக்கணத்

திற் றீயுமாறு காண்பேன். பூதங்களெல்லாம் என் பாதம்பணிய ஏதமின்றி என் படைஞர் இக் குட்டத்தைக் கடப்பாராக. கொழுங்கனலையாயினும் அது குறுகியுள்ள தன்மையைக் கண்டவர்கள் கூசாமற்றொட்டு அதனை அவித்தற்கு முற்படுவர். அஃதேபோல் ஒருவர் வடிவத்தின்சிறுமைகண்டவர்கள், அவர் காரியத்தின்பெருமைகண்டாலல்லது உண்மைத்தன்மை தெளியாராய், அவரை அற்பரென்றே அவமதிப்பர். இஃது உலகத்தின் இயற்கை, காய்கனி நுகர்ந்து காட்டிலே திரியும் மானிடனென்றெண்ணி என்னை இவ் வாரிதி எளனம் செய்தது. இம்மீனுடைக் கடற்பெருமையையும் என் மானுடச்சிறு தன்மையையும் இப்பொழுதே தேவர்கள் காணத் தெளிவிக்கின்றேன்.'' என்று இவைபோல்வன பலவுஞ்சொல்லி, பெருமாள் தம் இளவலை நோக்கி வில்லும் அம்பும் கொணருமாறு ஏவினர். கண்கள் தீப்பொறி பறக்க வெம்பிய மனத்துத் தம்பியும் அவற்றை விரைவினில் தந்தார்.

அப்பொழுது பெருமாளுடைய திருமுகமண்டலம் ப்ரளய காலத்து ஸூர்யன்போல் ஜ்வலித்தது. அந்தஸூர்யகிரணம்போன்ற பாணங்கள் பலவற்றை அவர் ஸமுத்திரத்திற் செலுத்தினர். அதனால் நெடுங்கடலும் தன் நிலைகுலைந்தது. அதன் நீர்முழுவதும் கொளுகொளுவென்று கொதித்தது மத்ஸ்யம் முதலான ஜீவராசிகள் மாண்டன. கடலெங்கும் கரிந்து சாம்பராயிற்று உப்புவேலை யென்னும் பழிப்பு நீங்கி அளக்கர்தான் அப்புவேலையாய் நிறைந்தது. மற்றும்அப்பொழுது நிகழ்ந்த அதிசயங்கள் மிகப்பல ஊழியினிறுதியில் நிலத்தையுண்ணுவதுநீர், நீரையுண்ணுவது நெருப்பு; என்னும் உண்மைப் பொருள் அந்தசமயத்தில் நிதர்சனமாயிற்று. ஆயினும் உலகமுண்டபெருவாயரான எம்பெருமானுக்கு இச்செயல்களெல்லாம் ஓர் அருமையுடையன வாகுமோ?

இந்த நிலைமையில் அவருடைய குரங்குப் படைகளுங்கூடக் கைகழன்று ஓடத்தலைப்பட்டன —

"உள்ளலைப்பாவிகாள் மனிசனென்றுகொண்(டு)
எள்ளலுற்றறைந்தனம் எண்ணிலாமென
வெள்ளிவெண்பற்களைக்கிழித்து விண்ணுறத்
துள்ளலுற்றிரிந்தன குரக்குழாந்தில".—

என்கிறார் கம்பநாட்டாழ்வார். இதன்கருத்து,—"ஏ! பாவிகளே! நமக்கு ஸ்வாமியாய் வந்தவரிடம், அவர்பெருமையை அறியாமல்,மனிசனென்று உரையாடி நாம் மதிகெட்டவரானோம்"; என்று குரங்குகள் ஒன்றற்கொன்று கூறிக்கொண்டு, தம் வெண்பல்லை வெளிக்காட்டி, ஆகாயத்திற்றாவி அகலப்போயின என்பதாம். இஃது ஒருபுறம் நிற்க;

பின்னரும் வருணன் முகங்காட்டாமையால் பெருமாள் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்தார். அதனால் தேவர்கள் திடுக்கிட்டனர். மழைக்குலங்கள் கதறின. வருணனும் வாயுலர்ந்தான். ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளெல்லாம் அறவே வறண்டன. எழ்பெருங்கடலும் வாரியத் தொடங்கின. அண்டமூலத்துக்கப்பால் ஆழியுங்கொதித்தது.

"தோற்றமும் ஒடுக்கமும் தன்னுளேயாக உலகெலாம் ஓம்பும் ஒருதனிப்பொருளை வருணன் தானேயும் உணரான், வெகுளிகண்டும் வாரான், அரக்கரினும் இவனே கொடியன் கொடிய" னென்று ஞானியரெல்லாம் வருந்தினர். "முழுமுதற் றெய்வமே முனியப்புக்காற் பிழைக்கும் வழியெங்கே? அந்தோ! குற்றமொன்று மறியாத நமக்கும் இஃது அற்றமாய் முடியுமே," என்றுசொல்லி, மற்றையபூதங்களும் எல்லாம் வருணனையே வைதன.

அப்பொழுதுதான் வருணன் ஒன்றுமறியான்போல அழுதகண்ணுந் தொழுத கையுமாக வந்து தோற்றஞ்செய்தான். அச்சத்தால் நடுநடுங்கி அபயம்அபயமென்று அரற்றினன். "தீயன சிறியோர் செய்தாற் பொறுப்பது பெரியோர் மேற்றே" என்று சொல்லிக்கொண்டு பெருமாளுடைய திருவடிகளிற் சரணம் புகுந்தான். பொருள்சேர்ந்த புகழுரைகள் சிலவற்றால் அவன் அவரைப்போற்றலும் செய்தான்.

"எம்பெருமானே! ஆழியும், அனலும், அல்லாதபொருள்களும் என்று உலகத்தில் வேறுவேறு காணப்படுவன எல்லாம் உம்முடைய வடிவமேயாகும். எனக்கென்று வலிமை வேறொன்றுமில்லை. உம்மை மறந்தால் அடியேனுக்கு உய்யுமாறுண்டோ? உலகத்தையெல்லாம் படைத்தலும் காத்தலும் நீரேசெய்கிறீர். அவற்றை அழிக்கக்கருதினால், உமது திருக்கரத்திற் சரம் ஒன்றே அமையுமே. எளியேனை நலிகைக்கு இத்தனையும் வேண்டுமோ? உம்முடைய மஹிமைகள் உமக்கேயும் உணர்வரிய. நாயினுங் கடைப்பட்ட நான் அவற்றை எங்ஙனம் அறிவேன்?" என்று இவைபோன்ற வசனங்களால் அவன் அவரை ஸ்தோத்ரம் செய்தான்.

இவ்வாறெல்லாம் வருணன் வழிபடுதற்கு முன்னரே, பொங்கியெழுகின்ற பாலிற் புனல்தெளித்தாற்போல, பெருமாளுடைய கோபாக்நி அமர்ந்தது. வருணனிடம் காட்டிய நிக்ரஹம் அநுக்ரஹமாய் முடிந்தது. தாம் முன்புசெய்ததைக்குறித்து அவர் சிறிது லஜ்ஜையும் அடைந்தார். "நீ சிறிதும் அஞ்சவேண்டா, நாம் உனக்கு அபயமளித்தோம்" என்று அவர் அவனைத்தேற்றினார்.

பின்னரும் பெருமாள் வருணனை நோக்கி, "நாம் நின்னைப் பலகால் வணங்கி இரந்தபொழுது வாராமல், கோபமூண்ட பின்னரே நீ குறுகின காரணம் என்னை?" என்று விருப்பத்துடன் வினவினார். அதற்கு வருணன் "எம்பெருமானே! நான் எழாவது திரைக்கடலில் மீன்களுடைய போர்த்தொழில் விலக்கப் போயிருந்தேன்; புகுந்ததொன்றும் அறிந்திலேன்" என மறுமொழி கூறினான்.

அதுகேட்ட பெருமாள் மிகவும் இரக்கமுற்று, "என் கையின் மீளாத வெம்பகழிக்கு ஓர் இலக்கம் இன்றியமையாதாகும்; நின் பகைவர் யாவர்? சொல்லுவாயாக;" என்று இனிதாக இயம்பினார். வருணனும் அதனை நன்றென்று நயந்தான்.

"மருகாந்தாரம் என்பதொரு த்வீபத்தில் கொடிய அரக்கர்பலர் வாழ்கின்றனர்; அவர் தின்னுதலால் உலகத்திற் பலவிடங்கள் பாழாயின; அவர்கள் எனக்கும் தீமைசெய்பவரே யாதலால், நும்கணையை

அவ் வெய்யவர்மீது செல்லவிடுக;" என்று அவன் வேண்டிக்கொண்டான். வேண்டினவாறே அவ் வரக்கரனைவரும் ஒருசேர மாண்டனர். பிறகு, ஸமுத்ரராஜன் தலையினுற்றுங்க ஸேதுவென்னுந் திருவணையியற்றி, பெருமாள் தம் வானரப்படையுடன் இலங்கையை எய்தினர்.

பெருமாள் வருணனிடம் புரிந்த அநுக்ரஹத்தின் அருமைதான் என்னே? அவனுக்குத்தாம் தலைவணங்கித் தாழ்ந்து பெருமை யளித்தார். அவன் தம்மை உபேக்ஷித்திருந்த குற்றத்தையும் பொறுத்தார். அதன்மேலும் அவர் அவனுடைய விரோதிகளைப் போக்கி ரக்ஷித்தலும் செய்தார். இங்ஙனம் வருணனெய்தின நன்மை மும்மடி சிறந்து விளங்குகின்றது.

கருணையங்கடல் கருங்கடலைநோக்கிக்கிடந்து பேரருள்சுரந்த வரலாறு இது. தன்னைமதியாமல் அவமேகழியும் ஒரு சேதனன் விஷயத்திலும் அவனைத் திருத்திப்பணிகொள்ளுகைக்கு எம்பெருமான் இவ்வளவு க்ருபையும் செய்கிறான், என்பதற்கு இஃது எடுத்துக்காட்டாய் உள்ளது. முதன்முதல் இவனை உயர்த்துகைக்கு அவன் தன் நிலையினைத் தாழ இழித்துக்கொள்ளுகிறான். பின்னரும் அருமையறியாதே விமுகனாய்ப்போரும் இவனை, ஏதேனுமொரு காரணத்தை யிட்டுத் தானாகவே அபிமுகனாக்கிக் கொள்ளுகிறான். அதன்மேலும் இவனுடைய பூர்வதோஷத்தை மறந்து, பாபபலனைப்போக்கி, தனக்கு ஆட்கொள்ளவும் செய்கிறான். இவையெல்லாம் பகவானுடைய பரம காருண்யமேயன்றி வேறுண்டோ?

பகவதநுபவப்ரதிபந்தகமான கர்மபலனை எம்பெருமான் சேதனனிடமிருந்து கழிப்பதில் இரண்டுவிதம் உண்டு. ஒன்று, தன் ஸங்கல்பத்தால் அதனை முழுவதும் நாசமாக்குதல். மற்றொன்று, புண்ணியத்தை அநுகூலரிடத்திலும் பாபத்தை ப்ரதிகூலரிடத்திலும் போக்கிவிடுதல். இவ் விரண்டுவகையிலும், வருணனுக்கு அநுக்ரஹித்ததைப் பிந்தினக்ரமத்திற்கு த்ருஷ்டாந்தமாக நம் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்தனர். "பூர்வாகங்களையும் உத்தராகங்களையும், அநுகூலர் விஷயமாகவும், ப்ரதிகூலர் விஷயமாகவும், வருணனைக் குறித்துத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே

அசல் பிளந்தேறிட்டு" என வரும் அர்ச்சிராதிரஹஸ்யப்பகுதியை நோக்குக. இதில், பூர்வாகமென்றது, பகவத்விஷயஜ்ஞானம் பிறப்பதற்கு முன்பு செய்த கர்மத்தை. உத்தராகமென்றது, அதற்குப் பின்பு செய்த கர்மத்தை. இவை இரண்டற்குமுரிய புண்யங்களை அநுகூலரிடத்திலும், பாபங்களை ப்ரதிகூலரிடத்திலும் எம்பெருமான் போக்கியருள்வனென்பதாம். அசல் பிளந்து எறிடுகையாவது, அந்யத்ரஸங்க்ரமிப்பிக்கை. இது நிற்க,

"வேங்கடங்கள்மெய்ம்மேல்வினைமுற்றவும்
தாங்கடங்கட்குநல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்குநமோவெனல்
ஆங்கடமையதுசுமந்தார்கட்கே"

என்னும் திருவாய்மொழிப் (3-3-6) பாசுரத்திலும் இவ்வர்த்தம் அருளிச்செய்யப்படுகிறது. இதன் கருத்து,—'வேங்கடத்துறைவார்க்கு நம: (எனக்கன்று; அவனுக்கே) என்று சொன்னவர்களுக்கு, பூர்வாகமும் உத்தராகமுமான பாபபலன்களெல்லாம் நசிக்கும், இது மெய்;' என்பதாம். பூர்வாகம் புத்தி பூர்வகமாகச் செய்துகொண்டதாயும், உத்தராகம் ப்ராமாதிகத்தால் வருவதாயுமிருக்கும். இவற்றுள் முன்னையதை "நஸ்மரத்யபகாராணாம்ஶதமபி" என்று மறந்தும், பின்னையதை "அவிஜ்ஞாதாஹிபக்தாநாமாகஸ்ஸு கமலேக்ஷண:" என்று காணாக்கண்ணிட்டும் எம்பெருமான் தன் பரமக்ருபையாலே க்ஷமித்துவிடுகிறான் என்பர்.

இவ்வாறு பாபங்களை அவன் க்ஷமித்தல்மாத்ரமன்றிக்கே, அவற்றை ஆச்ரிதவிரோதிகளான மற்றைப் பாபிகளோடே போக்கியும் அநுக்ரஹிக்கின்ற திறத்தை, பட்டர் பெரிதும் பாராட்டி அருளிச்செய்ததாக, இத்திருவாய்மொழியீட்டில் ஓர் ஐதிஹ்யம் காட்டப்பட்டுள்ளது. அது,—"பண்டு தலையில் மயிரின்றிக்கேயிருப்பானொருவன் நெற்பரிமாறுகின்றானாய், அங்கே ஒருவன்சென்று 'மயிரைப்பேணாதே நீர் தனியே நின்று பரிமாறுகின்றீர்' என்ன; 'ஏன்றான் நடந்த தீ?' என்ன; 'ஒன்றுமில்லை, கண்டுபோக வந்தேன்' என்ன; 'ஆகிலொரு

கோட்டையைக் கொண்டுபோகலாகாதோ?' என்று எடுத்துவிட; அவனத்தைக் கொண்டுவாராநிற்கச்செய்தே எதிரே ஒருவன் வந்து, 'இதெங்கே பெற்றது'? என்ன; 'உன்றன் மொட்டைத்தலையன் தந்தான்' என்றானாய், அவனத்தைச் சென்று அங்கே, 'இன்னானுடைமை வைத்துப்போகாநின்றானே!' என்ன; 'அடா! என் நெல்லையுங்கொண்டு என்னையும் வைத்துப் போவதே!' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து, 'என்றான்குழல்கள் அலையஅலைய ஓடிவாராநின்றதீ?' என்ன; 'ஒன்றுமில்லை, இன்னமொரு கோட்டை கொண்டுபோகச் சொல்லவந்தேன்' என்றானும்: அப்படியே கடலைமுகங்காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலைப்பிடிப்பது, கோலைத் தொடுப்பதாகாநிற்க, அவன்வந்து முகங்காட்டினவாறே, 'உனக்கம்புதொடுத்தோம்' என்ன லஜ்ஜித்து, 'உன்விரோதிகளைச்சொல்லு, காபித்தைவிட' என்றாரிறே!'
—என்பதாம்.

இதுவரை சொல்லிய விஷயங்களால், கடலில் வழிவேண்டுதல் வ்யாஜமாக பெருமாள் வருணனுக்கு அருள்புரிந்த பெருமையும், அவ்வாறே, ஆச்ரிதர்விஷயத்திலும, 'போயபிழையும் புகுதருவானின்றனவும்' ஆகியபாபங்களை எம்பெருமான் தன் க்ஷமையினால் சகிப்பிக்கை மாத்ரமல்லாமல். அவற்றை அவர்களுடைய சத்ருக்கள் பக்கல் போக்கியும் அநுக்ரஹிக்கின்ற அருமையும் ஒருவாறு உணரலாவன. 'இத்தனையன்பரானார்'க்கும் இரங்கியருளும் 'பித்தன்' பெருந்தகைமை முழுவதும் பேசுந்தரத்ததாமோ?

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

காரப்பங்காடு

ஸ்ரீமதுபயவேதாந்தவித்வான் சிங்கப்பெருமாள்ஸ்வாமி

திருநாடலங்கரித்த விஷயமாக

மதுரைத் தமிழ்ச்சங்கவித்வான்

திரு. நாராயணையங்கார்ஸ்வாமி செய்த

வாசிக கைங்கர்யம்.

எட்டிலே யாரும் எழுதா மறைப்பொருளை
ஈட்டிலே காட்டற் கினியா ருளரென்ன
நாட்டிலே கேட்டோர் நவில நரசிங்கவள்ளல்
வீட்டிலே என்றும் விளம்புதற்கு மேவினனே. (1)

தேனே யனைய திருவாய்மொழிப் பொருளைத்
தானே யுரையான்மால் தன்புகழ் சிங்கப்பெருமாள்
வானோர்க் குரைப்பான் வருகவென மானமிசைப்
போனோன் பெருமை புகலற் கெளிதேயோ. (2)

கண்ணோரும் காரப்பங் காட்டு நரசிங்கேறு
விண்ணோரும் போற்றிசைப்ப வீட்டையுற்ற தென்னேயோ
விண்ணோர்கள் போற்றுமந்த வீட்டு நரசிங்கேறே
மண்ணோர தொழக் காட்டில் வந்தருளிற்றுமன்றே. (3)

சீருள ராமாநுஜ சித்தாந்தத் திருவிளக்கைப்
பாருளிருள் நீக்கப் பரிந்தளித்த—பேரருளார்
சிங்கப் பெருமாள் திருவடிப்போ தெப்போதும்
தங்கப் பெறுமென் தலை. (4)

ஏட்டிலே யாரும் எழுதா மறைப்பொருளை
ஈட்டிலே காட்டற் கினியா ருளரென்ன
நாட்டிலே கேட்டோர் நவில நரசிங்கவள்ளல்
வீட்டிலே என்றும் விளம்புதற்கு மேவினனே.

குறிப்பு:—இச்செய்யுள்,-உபயவிபூதியிலும் ஸ்வாமியின் ப்ரபாவங்கள் உடனிலையாய் ஒருங்குதோன்றக்கூறுகிறது— ஏட்டில் எழுதா மறைப்பொருள் என்றது வேதாந்த தாத்பர்யமுள்ள ரஹஸ்யார்த்தங்களை, ஈடு-திருவாய்மொழி வியாக்யானம். இனியாருளரென்ன-(இனியார் உளரென்ன-) 1. யோக்யர்கள் உண்டென்பதாக; (இனி யாருளரென்ன-) 2. இனி ஒருவருமில்லையென்பதாக. கேட்டோர்-1. உபய வேதாந்தக்ரந்தங்கள் ஸேவிதத சிஷ்யர்கள்; 2. திருநாடலங்கரித்தது கேட்டவர்கள். நவில-1. உபயவேதாந்த ப்ரவசனம்பண்ணுநிற்க; 2. தத்ப்ரசம்ஸாகதநம்பண்ணுநிற்க. வீட்டிலே-1. திருமாளிகையிலே; 2. பரமபதத்திலே. என்றும்- 1. நித்யமாக; 2. அவிச்சின்னமாக. விளம்புதற்கு-விஸ்தரித்து ஸாதிப்பதற்கு. மேவினன்-1. திருவுள்ளம்பற்றியிருந்தவர்; 2. திருவுள்ளம்பற்றினர்.

[1. லீலாவிபூதிப்ரபாவம்:—] வேதாந்ததாத்பர்யமுள்ள ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் ஈட்டிலே காட்டற்குரிய ரஸிகர்களான வித்வான்கள் உண்டு என்னும்படி தம்மிடம் உபயவேதாந்தக்ரந்தங்கள் ஸேவித்த வித்வான்கள் இதர ப்ரதேசங்களில் ஒருபுறம் உபயவேதாந்த ப்ரவசனம்பண்ணவும், தாமும் தம்மைத் தேடிவருவோர் இல்லையென்றுபோகாதே பரமோதாரசீலராய்த் திருமாளிகையிலே நிஸ்ப்ருஹராயெழுந்தருளியிருந்துகொண்டு உபயவேதாந்தக்ரந்தங்களையெல்லாம் ஸாதித்தருளத் திருவுள்ளம்பற்றியிருந்தவர். [என்பது.]

[2. நித்யவிபூதிப்ரபாவம்:—] அவ் வெழுதாமறைப்பொருளையெல்லாம் ஈட்டிலே ஸமந்வயப்படுத்திக்காட்டுதற்கு இவர்போல் இங்கு ஒருவருமில்லையென்று சொல்லி இவர் திருநாடலங்கரித்தது கேட்டவர்களெல்லாம் இரங்கும்படி பரமபதத்திலேபோய்ப் பகவத்குணாநுபவம்பண்ண த திருவுள்ளம்பற்றினர். [என்பது.]

தேனே யனைய திருவாய் மொழிப்பொருளைத்
தானே யுரையான்மால் தன்புகழ் சிங்கப்பெருமாள்
வானோர்க் குரைப்பான் வருகவென மானமிசைப்
போனான் பெருமை புகலற் தெளிதேயோ.

[குறிப்பு:—] இப்பாட்டு முற்பாட்டில் 'வீட்டிலே என்றும் விளம்புதற்கு மேவினனே' (2) என்றதை விவரிக்கிறது. மால்—ஸ்ரீவை குண்டநாதன். உரையான்—முற்றெச்சம்; உரையானாகி என்றபடி. மால் தானேயுரையான் எனக் கூட்டுக. தன்புகழ் என்றது திருவாய் மொழிப்பொருளைச்சுட்டி மால் தானேயுரையாமைக்கு ஏதுவாயும், சிங்கப்பெருமாள் வானோர்க்குரைத்தற்குச் செயப்படுபொருளாயும் இடையேநின்றது. வானோர்—நித்தியஸூரிகள். 'சிங்கப்பெருமாள் வானோர்க்குரைப்பான் வருக' என்றது சுரோதாக்களாகிய வானோரை யும் வக்தாவாகிய சிங்கப்பெருமாளையும் நோக்கி உடனிலையாக எம்பெரு மான் அருளிப்பாடான வாக்கியத்தின் அநுகாரம். சிங்கப்பெருமாள் என்றது வானோர்க்குரைத்தற்கு வினைமுதலாயும் வருகவென்னும் வியங்கோட்கு விளியாயும் நின்றது. வானோர் என்றது முன்னிலைப் படர்க்கையும் படர்க்கையுமாயிற்று. உரைப்பான் என்றது முற்றும் எச்சமும் ஆம். வருக என்பது அநுமதியும் ஏவலுமாம். ஆகவே வானோரைப் பெருமாள் நோக்கி 'இத்தெளிவிசும்பிலுள்ளோராகிய உங்களுக்குத் திருவாய்மொழிப்பொருளைச் சிங்கப்பெருமாள் உரைக் கத்தக்கவர் அவர் வருவாராக.' என்றும், சிங்கப்பெருமாளைநோக்கி, 'சிங்கப்பெருமாள்! நீர் தெளிவிசும்புள்ளார்க்குத் திருவாய்மொழிப் பொருளுரைக்க இங்கு வருவீராக' என்றும் இரண்டுயோஜனையோடு கூடித் தந்த்ரோச்சாரணமாய் இருபொருளும்படநின்றது. மானம்—தேவவிமானம். மால், தன்புகழாதலால், திருவாய்மொழிப்பொருளைத் தானேயுரையானாகி, அதனை, 'சிங்கப்பெருமாள் வானோர்க்குரைப்பான் வருகவென மானமிசைப்போனான்' எனப் பொருண்முடிவுசெய்க

கண்ணேரும் காரப்பங் காட்டு நரசிங்கேற
விண்ணேரும் போற்றிசைப்ப வீட்டையுற்ற தென்னேயோ
விண்ணேர்கள் போற்றுமந்த வீட்டு நரசிங்கேறே
மண்ணேர் தொழக் காட்டில் வந்தருளிற்றுமன்றே.

[குறிப்பு:—] இப்பாட்டு ஸ்வாமியின் பிரிவாற்ருதவர் சோகிக்கும் படியையும் ஆப்தவாக்யத்தால் அவர்கள் ஆறுதலடையும்படியையும் விவரிக்கிறது. கண்ணேரும்—தர்சநீயமான. விண்ணேரும்—உம் அந்வாசயார்த்தத்யோதகம்; விண்ணேரும் போற்றிசைப்ப வீட்டையுமுற்றது என்னேஎன்றபடி. போற்றிசைப்ப—பல்லாண்டுபாட. காட்டில்– 1. (ராமைகதேசக்ரஹணத்தால்) காரப்பங்காட்டில்; 2. ஹிரண்யன் காட்டிய தூணில்; 3. அவன் கிதையில் காட்டிய இடமெங்கும். அருளிற்று—அருளுதலுடையது (குறிப்புவினை) என்னேயோ என்பது இழவுபற்றிவந்த இரக்கக்குறிப்பு; வீடு மீளாக்கதியாதலால் அதனை யடைந்தது அஸஹ்யமாயிற்று; இந்த தெசையில் விண்ணோகள் போற்றிசைப்பது, மண்ணேர்களான விவர்க்கு ஸ்வாஸாதாரண கைங்கர்யமாயிருந்த அப்பல்லாண்டு பாடுகையும் அந்யாக்ராந்தமாய்ப் புண்ணிலே கோலிட்டிடித்தாற்போலே அஸஹ்ய மாயிற்று; மேலும் மீளாக்கதிக்குப் பூண்கட்டலாயிற்றே என்றும் சோகிக்கலாயிற்று; கண்ணேரும் என்றதனுல், பல்லாண்டுபாடமாட்டாதாரும் உஜ்ஜீவிக்கும்படியிருந்த தர்சநீயமான ஸேவையும் இழந்தோமே என்று சோகிக்கலாயிற்று. 'விண்ணேர்கள் போற்றுமந்த வீட்டுநரசிங்கேறே—மண்ணேர்தொழக் காட்டில் வந்தருளிற்றுமன்றே' என்றது மீளாக்கதிக்கு மீட்சிகாட்டி ஆற்றுவித்த ஆப்தவாக்யத்தை அநுகரித்து ஆறுலடைந்தபடி. ஆம் என்றது ஆப்தவாக்யாநுகார த்யோதகம். ஆப்தவாக்யமிருக்கும்படி:—வீட்டையுற்றது மீளாக்கதியாயிற்றே என்று சோகிக்க வேண்டா; கருமபந்தனமின்றிக்கே சேதநாநுக்ரஹார்த்தம் அங்குள்ளார்களும் இங்கு வருவது போவதாயிருக்குமிடங்காணும், எம்பெருமானும் ஹிரண்யன் காட்டிய தூணிலவதரிக்கவில்லையா? நித்தியஸூரிகளும் ஆழ்வாராசார்யர்களாயவதரித்தருளினர்களன்றே. அப்படியே இவரும் அநுக்ரஹார்த்தமாகத் தம்மையாராதிப்பார் உத்தேசிக்குமிடங்களிலெல்லாம் எழுந்தருளியிருந்து, அவர்செய்யும் ஸமஸ்த கைங்கர்யங்களையும் உவந்தருளத்திருவுள்ளம்பற்றுவர். என்பதாம்.

சீருள ராமாநுஜ சித்தாந்தத் திருவிளக்கைப்
பாருளிருள் நீக்கப் பரிந்தளித்த—பேரருளார்
சிங்கப் பெருமாள் திருவடிப்போ தெப்போதும்
தங்கப் பெறுமேன் தலை.

[குறிப்பு:—] இது ஸ்வாமியின் சேதனோஜ்ஜீவன க்ருத்யம் இருக்கும்படி கூறுகிறது. சீருள—சிறப்புள்ள. ராமாநுஜ சித்தாந்தத்திருவிளக்கு என்றது ஸ்ரீராமாநுஜசித்தாந்தப்ரகாசிகை யென்னும் பொருளுரையை. பார்—லௌகிகஜனங்களும்; இழிவுசிறப்பும்மை தொக்கது. உள் இருள்-அகவிருளாகிய அஜ்ஞானத்தை, நீக்க—தாமே படித்து நீக்கிக்கொள்ளலாம்படி. பரிந்து-ப்ரீதியோடுகூடி. அளித்த—அநந்ய ப்ரயோஜநமாக ஸாதித்த. பேரருள்—அளவுகடந்த பரஸம்ருத்தி. ஆர்-பரிபூர்ணமாயுள்ள ;(சிங்கப்பெருமாள்); அன்றிக்கே, பேரருளார்சிங்கப்பெருமாள்-பேரருளாளருக்கு அஸாதாரண சேஷபூதரான சிங்கப்பெருமாளுடைய. திருவடிப்போது—ஸுகுமாரமாயும் தலையில் தரிப்பதற்கு அநுரூபமாயும் போக்யமாயும் உள்ளதென்றபடி. எப்போதும்-விட்டுநீங்காமல். தங்க-அது தானேவந்து தங்குதலாலே; யாத்ருச்சிகமாய்த்தங்க என்றபடி. பெறும்-பேறுடையதாகும். என்தலை-அடியனென்று சொல்லற்கிசையாத அஹங்கார மமகார விசிஷ்டனுடைய தலை. தலைக்குப் பேறுவது ப்ரஹ்மலிபியொழிகை; அது, இச்சேதனன் பேறன்றோவென்னில் ஆம்; அது இச்சேதனனுக்குப் பிறப்பொழியும் பேறுயிற்று. இவன் பிறப்பொழிகைக்குப் பண்ணிய சாதநாநுஷ்டானம் என்னெனில், இவன் அநாத்யவித்யாவாஸநாருசியாலே அஹங்கார மமகார விசிஷ்டனாய்க்கொண்டு அத்தலையை என் தலையென்று அபிமானித்துப்போந்ததேயாம் என்பது கருத்து.

ஸ்ரீ:

ஸ்ரீமதுபயவேதாந்தவித்வான் சிங்கப்பெருமாள்ஸ்வாமி

திருநாடலங்கரித்தவிஷயமாக

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழுதவிப்பத்திராசிரியர்,

T. K. இராமாநுஜையங்கார் செய்தவை.

எம்பெருமானார் தெரிசனத்தி னேற்றமெலாம்
நம்ப ருரைத்தற் குயர்ந்தோய் வருகவென
அம்புயைகோன் றொண்ட ரானாக நரசிங்கவள்ளல்
செம்பொன்மணி மாடத் திருநாடு சேர்ந்தனரோ. (1)

காட்டிக் கதியளிக்கக் காரப்பங் காட்டிருந்திக்
நாட்டி விறைசீர் நவின்றுவந்தார் இன்றுதிரு
நாட்டினுஞ் சென்று நவிலுதற்கு நண்ணினரேல்
மீட்டுமிவண் வந்தெமக்கு மெய்ப்பொருள்க ணல்குவரே. (2)

மாற்றலரு மேத்த மறைவிரிப்பார் வானோர்கள்
போற்றத் தெளிவிசும்பு புக்கமர்ந்தா ரானாலும்
மேற்றிசையிற் சென்றசுடர் மீட்டும் வருவதென
நாற்றிசையும் போற்றியுய நண்ணுவர் இஞ்ஞாலத்தே. (3)

சிங்கப் பெருமாள் திருநாடு சேர்ந்தனரால்
இங்கில்லை யென்றே யியம்புவது மென்னேயோ
எங்குமுள கண்ண னியல்விரிப்போன் றன்புகழால்
எங்குமுள னாகி யிருத்தல் இயல்பன்றோ. (4)

செய்யா மறையின் தெளிபொருளும் செந்தமிழிற்
செய்யதிரு வாய்மொழியின் செம்பொருளும்—கையிலங்கு
நெல்லியெனக் காட்டு நிமலன் சிங்கப்பெருமாள்
அல்லிமலர்த் தாளெம் மரண். (5)

ஸ்ரீ:

தமிழன்பர் மஹாநாடு.

பண்டைக்காலந்தொட்டு வருகிற சேர சோழ பாண்டிய மன்னர்களாலும், முக்காலமுணர்ந்த இருடிகளாலும் பொன்னேபோற் போற்றிவந்த நமதமிழணங்கின் எழினலன்களை எங்கும் பரவச் செய்யவேண்டுமென்று சென்னையில் மிகப்பெரியோர்பலர் ஒரு கூட்டம் கூடியுள்ளார்கள். பண்டைக் கால மன்னர்கள் சங்கங்கூடி, தமிழினை ஆராயலுற்றதுபோல இவர்களும் இங்ஙனம் ஆராயத்தொடங்கிய செயல் போற்றத்தக்கதே.

இந்த மகாநாடு வெளியிட்டிருக்கிற அறிக்கையில் தமிழ்மொழியின் பெருமையும், அது தற்காலமிருக்கும் நிலைமையும், இனி விர்த்திசெய்யவேண்டிய முறைமையும், தற்கால பண்டிதர்கள் செய்துவரும் தொண்டுகளும், இவைபோன்ற வேறுபல செய்திகளும் குறிப்பிடப் பெற்றுள்ளன. தற்காலத்தில் கல்லூரிகளிலும் உயர்தரக்கலாசாலைகளிலுமிருக்கின்ற பண்டிதர்களும் வேறு பல பண்டிதர்களும் பல நூல்கள் இயற்றியுள்ளார்கள். அவையெல்லாம் பெரும்பாலும் பண்டைகாலத்திலுள்ள செய்யுளுரைகளையே உரைநடையாக எழுதப்பெற்றவையாயும், காலவாராய்ச்சியாயும், சரித்திரவாராய்ச்சியாயும் இருக்கின்றன. இவற்றைப்பயில்வதால் மாணாக்கர்க்கு நுண்ணறிவு வளருமென்று துணிவதற்கிடமில்லை. தமிழுக்கு முதலாசிரியராய் விளங்கிய அகத்தியனாருளிய முதற்தமிழ் அறிதற்கரிதாய் விரவிக்கிடந்தமையைக் கண்ட அவர் மாணாக்கர் ஒவ்வொரு தமிழையும் பிரித்து வகைப்படுத்துரைத்து அக்குறையினை யகற்றினார்கள். அதுபோல அவர்கள் வகைசெய்துரைத்தவைகளுள் இக்காலத்திற்கறிதற்கரியனவாகிய பகுதிகளை நன்காராய்ந்து தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும். தொல்காப்பியத்திலும், சங்க நூல்களிலும் அறிதற்கரிய பகுதிகள் எத்துணையோ இருக்கின்றன. ஏனமுதலிய நூல்களெல்லாம் இறந்துபட்டன. இதுவும் தமிழிற்கோர் பெருங்குறையாமன்றே. இக்குறைபாடுகளெல்லாமகற்றுவதற்கு வடமொழியிலுள்ள தருக்க நூல்களையும் வேறுபல வரியநூல்களையும் மொழிபெயர்க்கவேண்டும். "ஆற்றினளவறிந்து கற்க வவையஞ்சா, மாற்றங்கொடுத்தற் பொருட்டு" என்று தெய்வப்புலவர் சிறந்த அவைக்களத்தில் அஞ்சாமல் எடுத்துரைப்பதற்குச் சொல்லிலக்கணத்தை அங்கமாகக்கொண்டு தருக்கநூலைப் பயில்க; என்று விதித்துள்ளார். இந்த விதிப்படி இந்நூலிற்புலமை ஏற்பட்டால் மாத்திரந்தான் வேறு பல நூல்களைப் பிழையின்றி ஆராய்ந்தெழுதுவதற்கும், பேசுவதற்கும் ஆற்றலுண்டாமென்பது ஒருதலை. ஆதலால் இத்தகைய நூல் வளர்ச்சிக்குரிய உபாயங்களையும், இன்றியமையாத நன்முறைகளையும் இந்த மகாநாடு தீர்மானித்து உலகிற்கு நன்மைபுரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த மகாநாடு சென்னைப் பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் நிகழும் 1933ஆம் டிசம்பர் 23, 24-ஆந்தேதிகளில் நடைபெறும். திவான்பஹதூர் டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பதோடு, சென்னைக் கல்வி மந்திரியான கௌரவம் பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமை வகிப்பார்கள்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

பரணர்:— இந்நூல் சென்னைச் சருவகலாசாலை ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் தமிழ் ஜூனியர் லெச்சரர் வித்வான், வே. வெங்கடராஜுலு ரெட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது. பரணர் பாடல்களும், அவற்றின் பிழைப்பகுதிகளின் திருத்தங்களும், அவற்றிற்பயின்றுள்ள அணிவகைகளும், அகத்துறைப் பாகுபாடுகளும், அகப்பொருட்கினறியமையாத உள்ளுறை யுவமத்திறன்களும், செய்யுட்களிலுள்ள பலவரிய சொற்றொடர்கட்கும், பண்டைக்கால பிற்கால இலக்கணங்கட்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் பலபுடைகளிற் காணப்படும் பரணர் வரலாறுகளும், ஆராய்ச்சிகளும், திருத்தங்களும, உந்நிற்றுச்சொல்லின விசேடமுடிபுகளும், வடமொழி தெலுங்கு, கன்னடம, மலையாளம் என்ற நூல்களின் துணைகொண்டு எடுத்துக்காட்டிய விசேடக்குறிப்புகளும், மெய்ப்பாட்டின் முறைகளும், பண்டைக்காலத்துப் பழக்கவழக்கங்களும், ஈண்டைக்குவேண்டும வேறுபலமுடிபுகளும் இதிற்காணப்படுகின்றன. பரணரைப்பற்றியும், அவரியற்றிய செய்யுட்களைக்குறித்தும் அறியவேண்டியவை யெல்லாம் இதில் அடங்கியுள்ளன.

இந்நூலாசிரியர் பலநாளும் பல நூல்களைப்பயின்று ஆய்ந்தாய்ந்து இங்ஙனம் பாகுபாடுபடுத்துப்பயப்பித்தின்திறன் போற்றத்தக்கது. இதுகாறும் இத்தகைய ஆராய்ச்சி நூல் வெளிவந்ததில்லையென்று சொல்வது மிகையாகாது. பண்டைக்காலத்து நல்லிசைப்புலவர்களின் வரலாறுகளும, அவர்களின் அறிவின் மாண்புகளும் ஒருங்கறிந்து கொள்வதற்குரிய கருவிநூல்களில்லை யென்ற குறையை இந்நூல் ஒருவகையானகற்றியது. இஃதல்லாமலும் பரணர்போன்ற சிறந்த புலவர்களின வரலாற்று முறை முதலியவைகளை இங்ஙனம் ஆராயவேண்டு மென்பதற்கு இந்நூல் வழிகாட்டியாகவும் திகழ்கிறது. அரசாங்கத்தார் இந்நூல் வெளிவருமாறு செய்த உதவி கொண்டாடத்தக்கது. இன்னும் இதுபோன்ற பல நூல்கள் வெளிவருமாறு உதவிபுரிந்தால் உலகிற்குபகாரமாயிருக்கும்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

இதன் விலை ரூ 2—8—0

The Registrar,
University of Madras,
Senate House, Chepauk
Triplicane P. O.
MADRAS. (S. I.)

பத்திராதிபர்.